# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 45 - 2023*

**கல்வி – 11.11.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**கலைவகுப்புகள் - 11.11.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.
மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**மாவீரர் நினைவாக நடாத்தப்படும் ஓவியப்போட்டி 2023.**

11.11.2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஓவியப்போட்டி நடைபெறும். பங்குபெறும் மாணவர்கள் அதற்கான தயார்நிலையில் வரவும்.

**ஆண்டுக்கூட்டம் பகுதி 2 - 11.11.2023**

இடம் : ஓசன் பாடசாலை மேல்க் கட்டிடம்.
நேரம்: 09:45-12:00 (இ.வே.10:45-11:15)
ஏற்கனவே அறிவித்ததுபோல் முழுமையான உறுப்பினர் உரிமை பெற்றவர்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியும்.
ஆண்டுக்கூட்டம் 2023 பகுதி 2 இற்கான நிகழ்ச்சிநிரல், இணைப்பைப் பார்க்கவும்!

**பெற்றோர்குழு 2023-2024 தெரிவு**

04.11.2023 அன்று 2023-2024 க்கான புதிய பெற்றோர்குழு தெரிவு நடைபெற்றது. தெரிவானர்களை 11.11.2023 நடைபெறும் பெற்றோர் கூட்டத்தில் அறிமுகம் செய்யப்படும்.

**புதிய நிருவாக உறுப்பினர்கள் தெரிவு 2023.**

11.11.2023 ஆண்டுக்கூட்டத்தில் தெரிவாகும் நிருவாக உறுப்பினர்கள் சந்திப்பு 18.11.2023 அன்று நடைபெறும்.

**அனைத்துலக அறிவாடல் போட்டி 2023**

அனைத்துலக அறிவாடற் போட்டியில் இந்த வருடமும் நோர்வே முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது அன்னையின் அனைத்து வளாகங்களுக்கும் பெருமையையும் மகிழ்ச்சியையும் தந்துள்ளது.
வெற்றியீட்டிய மற்றும் கலந்து சிறப்பித்த மாணவர்களுக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவிப்பதில் அன்னை லோறன்ஸ்கூக் வளாகம் பெருமை கொள்கிறது.

**எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்**

நத்தார்விழா - 16.12.2023

**மழலையர் முற்றம்**

நாள் : ஞாயிற்றுக்கிழமை 03.12.2023

இடம் : Nedre Rommen 3, 0988 Olso

நேரம் : 13.00

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.

**குறிப்பு: ஆண்டுக்கூட்டத்தினைக் கருத்திற்கொண்டு இவ்வாரம் vafler சுட்டு விற்கப்படமாட்டாது.**

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிதி 2023

**இந்த வாரம் முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 vår 2023 இற்குரிய கட்டணவிபரணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கவனத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள முடிவுத் திகதிக்குள் /விரைவாகச் செலுத்தினால் நன்று.**

**நிலுவையிலுள்ள பழைய (høst 2022) கட்டணங்களை விரைவாகச் செலுத்தவும். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.**

முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 கட்டண அறவீட்டுத் தகவல் இன்னும் கிடைக்காதவர்கள் நிதிப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

இந்த கல்வியாண்டு 2023-2024 høst 2023 கட்டண விபரம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

jude@annai.no

**முக்கிய கவனம்!!**

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* **(brannalarm)***, அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil, ambulanse osv)** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*
   *வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.*
   *பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*
   *எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil,politibil, ambulanse osv)** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்